Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 186/2015 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW6 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | தனபால் |
| Father's Name | – | முருகேசன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 14th March 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது நெகமத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். 11.08.2014 ம் தேதி காலையில் நான் கோழிக்கடைக்குச் சென்றேன். நெகமம் பழைய காவல்நிலையத்தின் அருகே உள்ள அரசு மதுபானக் கடை அருகே கூட்டமாக இருந்தது. நான் என்னவென்று கேட்டேன். பணம் திருட்டு போனதாக பேசிக்கொண்டிருந்தார்கள். மேற்பார்வையாளர் செந்தில்குமாருக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள். அவர் காவல்நிலையம் சென்று புகார் அளித்தார். போலிசார் சம்பவ இடம் வந்து வரைபடம் வரைந்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அது **அசாஆ.2** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்தில் இருந்து சுமார் 1 கி.மீ தூரத்தில் என் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் கோழிக்கடைக்குச் செல்லும்போது காலை சுமார் 9 மணியிருக்கும். நான் சென்று 5 நிமிடம் கழித்து போலிசார் சம்பவ இடம் வந்தனர். சம்பவ இடத்தின் அருகே பேக்கரி மற்றும் கடைகள் 500 மீட்டர் தள்ளிதான் உள்ளது. சம்பவ இடம் பல்லடம் பிரதான சாலை என்றால் சரிதான். போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான்.

போலிசார் சம்பவ இடத்திற்கு வரும்போது அருகில் இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள் என்றால் சரிதான். அசா.1 எனக்கு பழக்கம் ஆனவர் என்றால் சரிதான். நான் இவ்வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்திற்குச் சென்றபோது போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் வைத்துதான் கையொப்பம் இட்டேன். நான் காலையில் சம்பவ இடத்திற்குச் சென்றபோது போலிசார் அங்குவைத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் இட்டேன். காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டுவிட்டு எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம்
அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 186/2015 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW7 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | பெருமாள் |
| Father's Name | – | மருதப்பன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 14th March 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மூட்டாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. எனக்கு விபத்து ஏற்பட்டு சில நாட்கள் நான் சுயநினைவின்றி இருந்தேன். நெகமம் பேருந்து நிறுத்தத்தில் போலிசார் என்னிடம் கையொப்பம் இட்டார்கள். ஒரு பையனை அழைத்துவந்தார்கள். அவன் உடைந்துபோன ராடை எடுத்துத் தருகிறேன் என்று போலிசாரை அழைத்துச்சென்றான். என் முன்னால் எந்த பொருளையும் கைப்பற்றப்படவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 186/2015 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சக்திவேல் |
| Father's Name | – | மயில்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 14th March 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கருமாபுரத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். 10.08.2014 ம் தேதி அன்று அரசு மது பான கடையில் திருட்டுபோனதாகக் கூறினார்கள். நான் அதனருகே கடை வைத்திருந்தேன். போலிசார் 3 நாட்கள் எங்களை விசாரித்தார்கள். 14 ம் தேதி இரவு 10 மணிக்கு மேல் எங்களை வரச்சொன்னார்கள். நெகமம் புது பேருந்து நிறுத்தம் அருகே ரவி என்ற ஒரு நபரை பிடித்ததாகக் கூறி வரச்சொன்னார்கள். மேற்படி நபர்தான் பணம் எடுத்துள்ளார் என்று என்னை கையொப்பம் இடச் சொன்னார்கள் நான் கையொப்பம் இட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பங்கள் முறையே **அசாஆ. 3 , 4 மற்றும் 5** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான் . அது **அசாஆ. 6** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்கண்ட விபரங்கள் போலிசார் கூறிதான் தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.